# திருக்குறள் தெளிவுரை

மூன்றாம் படிவம்



வித்துவான். சுந்தர-சண்முகனார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில்
காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at
https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

பதினொன்றாவது வெளியீடு:

# திருக்குறள் தெளிவுரை—3.

உயர்நிலைப்பள்ளி மூன்றாம் பாரத்திற்குரிய

## எழுபது திருக்குறளும்,

மயிலம் தமிழ்க் கல்லூரியில்
விரிவுரையாளரா யிருந்த

வித்துவான். சுந்தர-சண்முகனார்

எழுதிய

## தெளிவுரையும்.

விலை அணா 5

பைந்தமிழ்ப் பதிப்பகம்
61—பி, வைசியர் தெரு,
புதுச்சேரி.

# தோற்றுவாய்

**திரு**வள்ளுவரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். அவர் உயர்ந்த தமிழ்ப் புலவர். நற்குண நற்செய்கை உடையவர். சுமார் 1700 ஆண்டுகட்குமுன், சிறப்புடன் தமிழ் நாட்டில் வாழ்ந்தவர். பொய்யா மொழி, தெய்வப்புலவர் என்று வேறு பெயர்களும் உடையவர். அவர் எழுதிய புத்தகமே திருக்குறள்.

பொதுவாக இரண்டடிப் பாட்டைக் குறள் என்பார்கள். திருக்குறளிலுள்ள அழகிய 1330 பாட்டுக்களும் இரண்டடி உடையன. ஆதலால், அதற்குத் திருக்குறள் என்று பெயர் வைக்கப்பட்டது. இன்னும், உலகத்தார்க் கெல்லாம் பொதுவான கருத்துக்களைச் சொல்லுவதால் **பொதுவேதம்** என்றும் இதற்கு ஒரு பெயர் உண்டு. இதனை எல்லாச் சாதி சமயத்தினரும் போற்றுகின்றனர்.

திருக்குறளில், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று பகுதிகள் உண்டு. ஒவ்வொரு பகுதியிலும் பல அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பத்துக் குறள்கள் உள்ளன.

இத்தகைய திருக்குறளி லிருந்து, நீங்கள் படிப்பதற்காக எழுபது குறள்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. அவற்றைத் தெளிவுரையுடன் இப் புத்தகத்தில் படிக்கலாம். இவ்வுரையில், அதிகாரப் பெயரும், அதன் விளக்கமும், குறள் மூலமும், பதவுரையும், கருத்துரையும், எழுவாய் பயனிலைகளும் முறையே எழுதப் பட்டுள்ளன. இரண்டு வாக்கியம் உள்ள குறள்கட்கு இரண்டு எழுவாய் பயனிலைகள் எழுதப்பட்டிருக்கும்.

# திருக்குறள் தெளிவுரை

## 1. கடவுள் வாழ்த்து

*எல்லாம் வல்ல கடவுளை வாழ்த்துதல்.*

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்.**

(பதஉரை) *மலர்மிசை—(அன்பர்களின் மனமாகிய தாமரை) மலரின்மேல், ஏகினான்—சென்றிருக்கும் கடவுளுடைய, மாண்—மாட்சிமைப்பட்ட, அடி—திருவடியை, சேர்ந்தார்—இடைவிடாது நினைப்பவர்கள், நிலமிசை—நிலத்தின்மேல், நீடு—(நீண்ட இன்பங்களுடன்) நீண்டகாலம், வாழ்வார்—வாழ்வார்கள்.*

(கருத்துஉரை) *கடவுளை வழிபடுபவர்கள் ஆயுள் முதலிய நலங்கள் நீட்டிக்க வாழ்வார்கள்.*

*சேர்ந்தார்—எழுவாய் ; வாழ்வார்—பயனிலை.*

## 2. நீத்தார் பெருமை

*பற்றுக்களைத் துறந்த பெரியார்களின் பெருமையைக் கூறுவது.*

**செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்.**

(ப-உ) *செயற்கு—(எல்லோரும்) செய்வதற்கு, அரிய—அருமையான காரியங்களை, செய்வார்—செய்ய முடிந்தவர்களே, பெரியர்—பெரியவராவார்கள். செயற்கு—செய்வதற்கு, அரிய—அருமையான காரியங்களை, செய்கலாதார்—செய்ய முடியாதவர்கள், சிறியர்—சிறியவரேயாவார்கள்.*

(க-உ) *எல்லோராலும் செய்ய முடியாத சிறந்த காரியங்களைச் செய்பவரே பெரியவர் ; அல்லாதவர் சிறியவர்.*

*செய்வார்—எழுவாய் ; பெரியர்—பயனிலை. செய்கலாதார்—எழுவாய் ; சிறியர்—பயனிலை. அரிய—குறிப்பு வினையாலணையும் பெயர்.*

## 3. அறன் வலியுறுத்தல்

*தருமத்தின் கட்டாயத்தை வற்புறுத்துதல்.*

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.**

(ப-உ) *மனத்துக்கண்—மனத்திலே, மாசு—குற்றம், இலன்-இல்லாதவனாக, ஆதல்—ஆகுதலே, அனைத்து அறன்—எல்லா அறமும் ஆகும். பிற—(மனத்தில் அழுக்கு வைத்துக்கொண்டு செய்யும்) பிற செயல்கள் எல்லாம், ஆகுலம்—ஆடம்பரமான, நீர—தன்மையை உடையனவாம்.*

(க-உ) *மனத்தில் வஞ்சகம் இன்றிச் செய்யும் காரியங்களே அறமாகும்.*

*ஆதல்—எழுவாய் ; அறன்—பயனிலை. பிற—எழுவாய் ; ஆகுலநீர—பயனிலை.*

## 4. இல்வாழ்க்கை

*கணவன் மனைவியுடன் வீட்டில் இருந்து நடாத்தும் குடும்ப வாழ்க்கை.*

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.**

(ப-உ) *இல்வாழ்க்கை—(ஒருவனுடைய) இல்லற வாழ்க்கை யானது, அன்பும்—அன்பினையும், அறமும்—தருமச் செயலினை யும், உடைத்தாயின்—உடையதாய் இருக்குமேயானால், பண்பும்-(அவ்வில்வாழ்க்கையின்) இலக்கணமும், பயனும்—நன்மையும், அது—(அந்த அன்பும் அறமும் உடைத்தா யிருக்கின்ற) அச் செயலே.*

(க-உ) *எல்லோரிடத்தும் அன்பு பூண்டு அறம் செய்வதே இல்வாழ்க்கையின் பண்பும், பயனும் ஆகும்.*

*பண்பும் பயனும்—எழுவாய் ; அது—பயனிலை.*

## 5. மக்கள் பேறு

*நல்ல பிள்ளைகளைப் பெறும் பேறு.*

**தந்தை மகற்(கு) ஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி யிருப்பச் செயல்.**

(ப-உ) *தந்தை—தகப்பன், மகற்கு—தன் மகனுக்கு, ஆற்றும்—செய்யவேண்டிய, நன்றி—உதவி (என்னவென்றால்), அவையத்து—(படித்தவர் நிறைந்த) சபையில், முந்தி—முதன்மையாய், இருப்ப—இருக்கும்படி, செயல்—(கல்விகற்கச்) செய்தலாம்.*

(க-உ) *தந்தை மகனுக்குச் செய்யவேண்டிய உதவி, கற்றோர் சபையில் முதல்வனாகும்படிக் கல்வி கற்பித்தலாம்.*

*நன்றி—எழுவாய் ; செயல்—பயனிலை.*

## 6. அன்புடைமை

*எல்லோரிடத்தும் அன்பு வைத்தல்.*

**அறத்திற்கே அன்புசார்(பு) என்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

(ப-உ) *அறியார்—தெரியாதவர்கள், அறத்திற்கே—அறம் செய்வதற்கு மட்டுமே, அன்புசார்பு—அன்பு துணையாகும், என்ப —என்று சொல்வார்கள். மறத்திற்கும்—(குற்றம் செய்தவரைத் திருத்துவதற்காகத்) தண்டிக்கும் செயலுக்கும், அஃதே—அந்த அன்பே, துணை—துணையாகும்.*

(க-உ) *தருமம் செய்வதற்கும், குற்றவாளிகளைத் திருத்துவதற்காகத் தண்டிப்பதற்கும் காரணம் அவர்கள்மேல் உள்ள அன்பே.*

*அறியார்—எழுவாய் ; என்ப—பயனிலை. அஃதே—எழுவாய் ; துணை—பயனிலை.*

## 7. விருந்தோம்பல்

*தம்மிடம் வந்த விருந்தினரை உபசரித்தல்.*

**மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து.**

(ப-உ) *அனிச்சம்—அனிச்சம் என்னும் பூ, மோப்ப-மோந்த அளவிலேயே, குழையும்—வாடிவிடும். (அதுபோல) விருந்து—விருந்தினர், முகம் திரிந்து—(வீட்டினர்) முகம் வேறுபட்டு, நோக்க—நோக்கிய அளவிலேயே, குழையும்—மனம் வாடுவர்.*

(க-உ) *விருந்தினரைக் கடுமையாக நோக்கி வாடச் செய்ய லாகாது.*

*அனிச்சம்—எழுவாய் ; குழையும்—பயனிலை. விருந்து—எழுவாய் ; குழையும்—பயனிலை. விருந்தினர்க்கு அனிச்சத்தை உவமையாகக் கூறியதால் இஃது உவமை யணி.*

## 8. இனியவை கூறல்

*இனிமையான சொற்களைப் பேசுதல்.*

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.**

(ப-உ) *இனிய—இனிமையான சொற்கள், உளவாக—இருக்க (அவற்றை விட்டு) இன்னாத—இனிமை யில்லாத சொற்களை, கூறல்—ஒருவன் பேசுதல், கனி—(இனிப்புள்ள) பழங்கள், இருப்ப—இருக்க, (அவற்றைவிட்டு) காய்—(இனிமையில்லாத) காய்களை, கவர்ந்த அற்று—கவர்ந்து தின்னும் அச்செயலோடு ஒக்கும்.*

(க-உ) *கடுஞ்சொற்களை நீக்கி, இன்சொற்களைப் பேசவேண்டும்.*

*கூறல்—எழுவாய் ; கவர்ந்தற்று—பயனிலை. இன்சொல்லுக்குக் கனியையும், கடுஞ்சொல்லுக்குக் காயையும் உவமை கூறிய தால் இஃது உவமை அணி.*

## 9. செய்ந்நன்றி அறிதல்

*தமக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை.*

**செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது.**

*(ப-உ) செய்யாமல்—(தான் பிறர்க்கு உதவி) செய்யாமலேயே, செய்த—(பிறர் தனக்குச்) செய்த, உதவிக்கு—உபகாரத்திற்கு, வையகமும்—மண்ணுலகமும், வானகமும்—விண்ணுலகமுங்கூட, ஆற்றல்—(பதில் உதவிக்காக)ஒத்தல், அரிது—முடியாது.*

*(க-உ) செய்யாமல் செய்த உதவி, மண்ணுலக, விண்ணுலகங்களினும் உயர்ந்ததாகும்.*

*ஆற்றல்—எழுவாய் ; அரிது—பயனிலை.*

## 10. நடுவு நிலைமை

*எல்லோர்க்கும் பொதுவாக நடக்கும் தன்மை.*

**நன்றே தரினும் நடுஇகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்.**

*(ப-உ) நன்றே—நன்மையினையே, தரினும்—தருவதாய் இருந்தாலும், நடு—நடுவு நிலைமையை, இகந்து—கடப்பதால், ஆம்—உண்டாகும், ஆக்கத்தை—செல்வத்தை, அன்றே—அப்பொழுதே, ஒழிய—நீங்கும்படி, விடல்—நீ விட்டுவிடுக.*

*(க-உ) நடுவுநிலைமை தவறி வரும் செல்வத்தை அப்பொழுதே விட்டுவிட வேண்டும்.*

*நீ—தோன்றா எழுவாய் ; விடல்—பயனிலை. விடல்—அல் விகுதி ஏற்ற வியங்கோள் வினைமுற்று.*

## 11. அடக்கம் உடைமை

*அடக்கம் உடையவராய் இருத்தல்.*

**யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்**
**சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.**

(ப-உ) யா—(காக்கவேண்டிய) வேறு எவற்றையாவது, காவார் ஆயினும்—காத்து அடக்காமல் விடுவாராயினும், நா—(துடுக்கான) நாக்கை, காக்க—(மக்கள்) காத்து அடக்குவாராக. காவாக்கால்—அப்படிக் காக்காவிட்டால், சொல் இழுக்கு—சொல் குற்றத்தின்கண், பட்டு—அகப்பட்டு, சோகாப்பர்—(அன்னோர்) துன்புறுவர்.

(க-உ) நாவை அடக்கி நல்ல பேச்சுப் பேசாதவர் துன்பப் படுவர்.

நாகாவார்—தோன்று எழுவாய்; சோகாப்பர்—பயனிலை.

## 12. ஒழுக்கம் உடைமை

நல்லொழுக்கம் உடையவராய் இருத்தல்.

**உலகத்தோ(டு) ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

உலகத்தோடு—(உயர்ந்தோர் ஏற்படுத்திய) உலக ஒழுக்கத் தோடு, ஒட்ட—பொருந்த, ஒழுகல்—ஒழுகுவதை, கல்லார்—அறி யாதவர்கள், பல கற்றும்—பல நூல்களையும் கற்றிருந்தாலும், அறிவிலாதார்—அறிவு இல்லாதவரே யாவார்கள்.

(க-உ) உயர்ந்த உலக ஒழுக்கம் தெரியாதவர்கள் கற்றிருந் தாலும் கல்லாதவராகவே கருதப்படுவார்கள்.

கல்லார்—எழுவாய்; அறிவிலாதார்—பயனிலை.

## 13. பொறை உடைமை

பொறுமை உடையவராய் இருத்தல்.

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று.**

(ப-உ) இறப்பினை—(பிறர் செய்த) மிக்க குற்றத்தினை, என் றும்—எப்போதும், பொறுத்தல்—பொறுத்துக்கொள்வாயாக. அதனை—அம்மிக்க குற்றத்தினை, மறத்தல்—அறவே மறந்து விடுதல், அதனினும்—அப்பொறையைக் காட்டிலும், நன்று—மிக நல்லதாகும்.

(க-உ) பிறர் செய்த குற்றத்தைப் பொறுப்பதும், மறப்பதும் ஒன்றற்கு ஒன்று உயர்ந்தனவாகும்.

*மறத்தல்—எழுவாய் ; நன்று—பயனிலை.*

## 14. வெஃகாமை

*பிறர் பொருளைக் கவர நினையாமை.*

**இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற**
**புன்மைஇல் காட்சி யவர்.**

(ப-உ) புலம்—(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து) புலன்களையும், வென்ற—(அடக்கி) வென்ற, புன்மை இல்—குற்றம் இல்லாத, காட்சியவர்—நல்லறிவு உடையவர்கள், இலம் என்று—(யாங்கள் வறுமையால்) இல்லாதவர்கள் என்று, வெஃகுதல்—(பிறர் பொருளைக்) கவருதலை, செய்யார்—செய்ய மாட்டார்கள்.

(க-உ) ஆசையை அடக்கியவர்கள வறியவராயினும், பிறர் பொருளைக் கவரமாட்டார்கள்.

*காட்சியவர்—எழுவாய் ; செய்யார்—பயனிலை.*

## 15. புறங்கூறாமை

*இல்லாத விடத்துப் பிறரை இகழ்ந்து கோள் சொல்லாமை.*

**கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**
**முன்னின்று பின்நோக்காச் சொல்.**

(ப-உ) கண்நின்று—(ஒருவனுடைய) கண் எதிரே நின்று கொண்டு, கண்அற—கண்ணோட்டம் இல்லாமல், சொல்லினும்-(அவனைப்பற்றிக் கொடுமையாகப்) பேசினாலும், முன் இன்று—அவன் முன்னால் இல்லாமல், பின்—அவனுக்குப் பின்னே, நோக்கா—அவன் கண்டறியாத, சொல்—பழிச்சொற்களை, சொல்லற்க—(புறங்கூறி) நீ பேசாதே.

(க-உ) ஒருவன் எதிரே பழிச்சொல் சொன்னாலும், இல்லாத விடத்துப் புறங்கூறல் ஆகாது.

*நீ—தோன்றா எழுவாய் ; சொல்லற்க—பயனிலை.*

## 16. பயனில சொல்லாமை

*பயன்தராத பேச்சுக்களைப் பேசாதிருத்தல்.*

**சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க**
**சொல்லில் பயன்இலாச் சொல்.**

*(ப-உ) சொல்லின்—சொல்லுவாயே யானால், பயன் உடைய-பயன் தரக்கூடிய சொற்களையே, சொல்லுக—நீ சொல்லுவா யாக. சொல்லில்—சொற்களுக்குள்ளே, பயன் இலா—பயன் தராத, சொல்—சொற்களை, சொல்லற்க—நீ சொல்லாதே.*

*(க-உ) பயன்தரக்கூடிய பேச்சுக்களையே பேச வேண்டும்.*

*நீ—தோன்றா எழுவாய்; சொல்லுக, சொல்லற்க—பய னிலைகள்.*

## 17. தீவினை அச்சம்

*கெட்ட காரியங்களைச் செய்யப் பயப்படுதல்.*

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால்.**

*(ப-உ) (ஒருவன்) தன்னைத்தான்—தன்னைத்தானே, காத லன் ஆயின்—(நன்றாய் இருக்கவேண்டும்என்று) விரும்புவானே யானால், தீவினைப்பால்—கெட்ட காரியப் பகுதியாகிய செயல் களுக்குள், எனைத்து—எவ்வளவு சிறிய, ஒன்றும்—ஒரு காரியத் தையும், துன்னற்க—நெருங்கிச் செய்யாமல் இருப்பானாக.*

*(க-உ) ஒருவன், தான் நன்றாக இருக்க வேண்டுமானால், சிறிதளவு தீமையும் செய்யலாகாது.*

*ஒருவன்—தோன்றா எழுவாய்; துன்னற்க—பயனிலை.*

## 18. ஒப்புரவு அறிதல்

*உலகநிலை உணர்ந்து உதவி செய்தலை அறிதல்.*

**இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்(கு) ஒல்கார்**
**கடன்அறி காட்சி யவர்.**

(ப-உ) கடன்—(தாம் செய்ய வேண்டிய) கடமையை, அறி—அறிந்த, காட்சியவர்—நல்லறிவுடையவர்கள், இடன்—(செல்வத்தை உதவக்கூடிய) வாய்ப்பு, இல்—இல்லாத, பருவத்தும்—(செல்வம் சுருங்கிய) காலத்திலும், ஒப்புரவிற்கு—உதவி செய்வதற்கு, ஒல்கார்—தளரமாட்டார்கள்.

(க-உ) உயர்ந்தவர்கள் செல்வம் குறைந்த காலத்தும், பிறர்க்கு உதவவே பாடுபடுவார்கள்.

*காட்சியவர்—எழுவாய் ; ஒல்கார்—பயனிலை.*

## 19. ஈகை

*ஏழைக்கு இல்லை யென்னாது கொடுத்தல்.*

**ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.**

(ப-உ) ஆற்றுவார்—(துன்பங்களைச்) சகிக்கும் தன்மை உடைய துறவிகளின், ஆற்றல்—வல்லமையாவது, பசி ஆற்றல்—பசியைத் தாங்கிக் கொள்ளுதலாகும். (அவ்வல்லமையும்) அப்பசியை—அந்தப் பசியை, மாற்றுவார்—(உணவு தந்து) போக்கக் கூடிய உபகாரிகளின், ஆற்றலின்—வலிமைக்கு, பின்—பிற்பட்டதே யாகும்.

(க-உ) பசியைத் தாங்கும் துறவிகளைக் காட்டிலும், பிறர் பசியைப் போக்குபவர்களே வலிமை உடையவர்கள்.

*ஆற்றல்—எழுவாய் ; பசி ஆற்றல்—பயனிலை. அப்பசி ஆற்றல்—தோன்றா எழுவாய் ; பிற்(பட்டது)—பயனிலை.*

## 20. புகழ்

*பிறர் கூறும் புகழ்ச்சி.*

**புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை**
**இகழ்வாரை நோவ(து) எவன்.**

(ப-உ) புகழ்பட—புகழ் உண்டாகும்படி, வாழாதார்—வாழ வகையில்லாதவர்கள், தம் நோவார்—(அக்குறைக்காகத்) தங்களை நொந்து கொள்ளாதவராகி, தம்மை—தங்களை, இகழ்

வாரை—இகழ்ந்து பேசும் பிறரை, நோவது—நொந்து பேசுவது, எவன்—என் ?

(க-உ) புகழ்ச்சியின்றி, இகழ்ச்சியாக வாழ்பவர்கள், தம்மை நோகவேண்டுமே தவிர, பிறரை நோகக்கூடாது.

நோவது—எழுவாய் ; எவன்—வினைப்பயனிலை.

## 21. கூடா ஒழுக்கம்

துறவிகள் செய்யக்கூடாத தீய நடத்தை.

**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த(து) ஒழித்து விடின்.**

(ப-உ) உலகம்—உலகத்தார்கள், பழித்தது—(துறவிகளுக்குக் கூடாது என்று) பழித்த தீய செயலை, ஒழித்துவிடின்—(துறவிகள்) நீக்கிவிடுவார்களே யானால், (பின்பு) மழித்தலும்—தலை மயிரை மொட்டை யடித்தலும், நீட்டலும்—நீட்டி வளர்த்தலும் ஆகிய செயல்கள், வேண்டா—வேண்டியதில்லை.

(க-உ) துறவிகளுக்கு வேடம் பெரிதன்று; ஒழுக்கமே பெரிது.

மழித்தலும், நீட்டலும்—எழுவாய் ; வேண்டா—பயனிலை.

## 22. கள்ளாமை

பிறர் உடைமையைத் திருடாமை.

**களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து**
**ஆவது போலக் கெடும்.**

(ப-உ) களவினால்—திருட்டினால், ஆகிய—கிடைத்த, ஆக்கம்-செல்வம், அளவு இறந்து—அளவு கடந்து, ஆவதுபோல—வளர்வதுபோலத் (தோன்றி) கெடும்—(பின் அளவு கடந்து) கெட்டுவிடும்.

(க-உ) திருடிப் பெற்ற செல்வம் முதலில் வளர்வதுபோலத் தோன்றினாலும், பின்பு கெட்டுவிடும்.

ஆக்கம்—எழுவாய் ; கெடும்—பயனிலை.

## 23. வாய்மை

மெய் உடைமை.

**தன்னெஞ்(சு) அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

(ப-உ) தன் நெஞ்சு—தன் மனம், அறிவது—அறிந்த ஓர் உண்மையை, பொய்யற்க—(பொய்யாக) நீ மறைக்காதே. பொய்த்த பின்—அப்படி மறைத்தால் பின்பு, தன் நெஞ்சே—தன் மனமே, தன்னைச் சுடும்—(மறைத்தோமே மறைத்தோமே என்று) தன்னைச் சுட்டுத் துன்புறுத்தும்.

(க-உ) ஒருவன் மனமறிந்த உண்மையை மறைக்கலாகாது.

நீ—தோன்றா எழுவாய்; பொய்யற்க—பயனிலை. தன் நெஞ்சே—எழுவாய்; சுடும்—பயனிலை.

## 24. வெகுளாமை

கோபம் கொள்ளாமை.

**நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்**
**பகையும் உளவோ பிற.**

(ப-உ) நகையும்—முகத்தில் தோன்றும் சிரிப்பையும், உவகையும்—மனத்தில் தோன்றும் மகிழ்ச்சியையும், கொல்லும்—அழித்துத் தோன்றுகின்ற, சினத்தின்—கோபத்தைக் காட்டிலும் (கொடிய), பிற பகையும்—வேறு பகைகளும், உளவோ—ஒருவருக்கு உள்ளனவோ ? (இல்லை)

(க-உ) ஒருவருக்குக் கொடிய பகையாவது அவரது கோபமே.
பகையும்—எழுவாய்; உளவோ—வினாப்பயனிலை.

## 25. இன்னா செய்யாமை

பிற உயிர்க்குத் துன்பம் செய்யா திருத்தல்.

**இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்.**

(ப-உ) இன்னு செய்தாரை—(தனக்குத்) துன்பம் செய்தவர் களை, ஒறுத்தல்—தண்டித்தலாவது, அவர் நாண—அவர்கள் வெட்கம் அடையும்படி, நல்நயம்—நல்ல இனிய நன்மைகளை, செய்து—அவர்களுக்குச் செய்து, விடல்—(பின் அவற்றை மறந்து) விடுவதாகும்.

(க-உ) தமக்குத் துன்பம் செய்தவர்க்கும், தாம் இன்பமே செய்ய வேண்டும்.

ஒறுத்தல்—எழுவாய் ; செய்து விடல்—பயனிலை.

## 26. இறை மாட்சி

அரசனது பெருந் தகுதி.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)**
**இறையென்று வைக்கப் படும்.**

(ப-உ) முறை செய்து—நீதி முறைப்படிச் செங்கோல் நடாத்தி, காப்பாற்றும்—(குடிகளைக்) காப்பாற்றுகின்ற, மன்ன வன்—அரசன், மக்கட்கு—மனிதர்களுக்கு, இறை என்று— கடவுள் என்று, வைக்கப்படும்—வைத்து மதிக்கப்படுவான்.

(க-உ) நீதி தவருத செங்கோல் மன்னன், கடவுளாகக் கருதப்படுவான்.

மன்னவன்—எழுவாய் ; வைக்கப்படும்—பயனிலை

## 27. கல்வி

படிக்க வேண்டிய நூல்களைப் படித்தல்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

(ப-உ) ஒருவற்கு—ஒருவனுக்கு, கேடு இல்—கெடுதல் இல் லாத, விழு—உயர்ந்த, செல்வம்—செல்வமாவது, கல்வி—கல் வியே. மற்றையவை—(நிலம் நீர், வீடு வாசல் முதலிய) மற் றைய பொருள்கள் எல்லாம், மாடு அல்ல—(சிறந்த) செல்வம் அல்லவாம்.

(க-உ) ஒருவனுக்கு அழியாத செல்வம் கல்வியே.

விழுச் செல்வம்—எழுவாய் ; கல்வி—பயனிலை. மற்றை யவை—எழுவாய் ; மாடல்ல—பயனிலை.

## 28. கல்லாமை

*படிக்க வேண்டிய நூற்களைப் படிக்காமை.*

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**
**கற்றாரோ(டு) ஏனை யவர்.**

*(ப-உ) இலங்கு—விளங்குகின்ற (மேம்பட்ட) நூல்—புத்தகங்களை, கற்றாரோடு—படித்தவர்களோடு (ஒத்திட்டுப் பார்க்கும் போது), ஏனையவர்—மற்றைய படிக்காதவர்கள், விலங்கொடு மக்கள் அனையர்—மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள வேறுபாட்டை ஒத்த அளவு வேறுபாடு உடையவராகக் காணப் படுகின்றார்கள்.*

*(க-உ) படித்தவருக்கும் படிக்காதவருக்கும் உள்ள வேறுபாடு, மனிதனுக்கும் மிருகத்திற்கும் உள்ள வேறுபாட்டைப் போன்ற அளவுடையது.*

*ஏனையவர்—எழுவாய் ; அனையர்—பயனிலை.*

## 29. கேள்வி

*கேட்க வேண்டிய நல்ல கருத்துக்களைக் கேட்டல்.*

**கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்(கு)**
**ஒற்கத்தின் ஊற்றாம் துணை.**

*(ப-உ) கற்றிலன் ஆயினும்—(ஒருவன் படிக்க வேண்டிய புத்தகங்களைப்) படிக்காதவனாக இருப்பினும், கேட்க—(படித்தவர் சொல்லும் நல்ல கருத்துக்களையாவது) கேட்பானாக. அஃது-அக்கேள்வி, ஒருவற்கு—(அவ்) ஒருவனுக்கு, ஒற்கத்தின்—தளர்ச்சிக் காலத்தில், ஊற்று ஆம்—ஊன்று கோல்போல் உதவக்கூடிய, துணை—துணையாகும்.*

*(க-உ) ஒருவன் படிக்காவிட்டாலும், பிறர் சொல்வதையாவது கேட்கவேண்டும்.*

*ஒருவன்—தோன்றா எழுவாய் ; கேட்க—பயனிலை. அஃது—எழுவாய் ; துணை—பயனிலை.*

## 30. அறிவுடைமை

*நல்ல அறிவு உடையவராய் இருத்தல்.*

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப(து) அறிவு**

(ப-உ) எப்பொருள்—எந்தப் பொருளையும், யார் யார் வாய்—யார் யார் வாயின் மூலமாக, கேட்பினும்—கேட்டாலும், அப் பொருள்—அவ்வப் பொருளினுடைய, மெய்ப்பொருள்-உண்மையான பயனை, காண்பது—காணவல்லதே, அறிவு—அறிவு எனப் படும்.

(க-உ) எவர் வாயிலிருந்து எதைக் கேட்டாலும், அதனிடத்துள்ள உண்மைப் பயனை அறிவதே அறிவுடைமை.

காண்பது—எழுவாய் ; அறிவு—பயனிலை.

## 31. இஃதும் அறிவுடைமையே

**சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ**
**நன்றின்பால் உய்ப்பது அறிவு.**

(ப-உ) சென்ற இடத்தால்—சென்ற இடங்களில் எல்லாம், செலவிடா—(மனத்தைச்) செல்லவிடாமல், தீது—தீய இடத்தினின்றும், ஒரீஇ—நீக்கி, நன்றின் பால்—நல்ல இடத்தின் கண், உய்ப்பது—செலுத்துவதே, அறிவு—(உயர்ந்த) அறிவாகும்.

(க-உ) மனம் போன போக்கெல்லாம் போகவிடாமல், நல்லதில் ஈடுபடுத்துவதே அறிவிற்கு இலக்கணம்.

உய்ப்பது—எழுவாய் ; அறிவு—பயனிலை.
ஒரீஇ—உயிர்அளபெடை.

## 32. குற்றம் கடிதல்

குற்றங்களைப் போக்குதல்.

**தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்**
**கொள்வர் பழிநாணு வார்.**

(ப-உ) பழி நாணுவார்—பழிக்கு அஞ்சுபவர்கள், தினைத் துணை ஆம்—தினை அளவினதாகிய சிறிய, குற்றம்—குற்றச் செயல், வரினும்—(தம்மிடம்) ஏற்பட்டாலும், (அதனை) பனைத் துணையா—பனை யளவு பெரிதாக, கொள்வர்—கருதுவார்கள்.

(க-உ) பெரியோர்கள், தாங்கள் தவறிச் சிறு குற்றம் செய்து விட்டாலும் அதற்காக வருந்துவார்கள்.

பழிநாணுவார்—எழுவாய் ; கொள்வர்—பயனிலை.

## 33. பெரியாரைத் துணைக்கோடல்

*நல்ல பெரியாரைத் துணையாகக் கொள்ளுதல்.*

**இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே**
**கெடுக்கும் தகைமை யவர்.**

(ப-உ) *இடிக்கும்—(தாம் குற்றம் செய்தபோது தம்மைத் திருத்துவதற்காகக்) கடிந்து பேசுகின்ற, துணையாரை—துணை யான பெரியவரை, ஆள்வாரை—தமக்கு வேண்டியவராகக் கொண்டுள்ள அரசரை, கெடுக்கும் தகைமையவர்—கெடுக்கக் கூடிய தகுதியுள்ளவர்கள், யார்—எவர் உள்ளனர்* ? (ஒருவரும் இலர்.) *ஏ—ஈற்றசை.*

(க-உ) *திருத்தும் பெரியோரைத் துணையாகக் கொண்டிருப் பவரை, எவராலும் கெடுக்க முடியாது.*

*தகைமையவர்—எழுவாய் ; யார்—வினைப்பயனிலை.*

## 34. சிற்றினம் சேராமை

*இழிந்த குணமுடையவர் கூட்டத்தில் கூடாமை.*

**மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்(கு)**
**இனநலம் ஏமாப் புடைத்து.**

(ப-உ) *மனநலம்—மன ஒழுங்கினை, நன்கு—நன்றாக, உடை யவர் ஆயினும்—(இயற்கையாக) உடையவராக இருந்தாலும், சான்றோர்க்கு—(அத்தகைய) பெரியோர்க்கு, இனநலம்—(தாம் கூடியுள்ள) கூட்டத்தாரின் ஒழுங்கு, ஏமாப்பு உடைத்து—பாது காவலாய் நிற்கும்.*

(க-உ) *இயற்கையாகவே நல்லவராய் இருப்பவர்க்கும்,சேர்க் கையும் நல்லதாய் இருக்க வேண்டும்.*

*இனநலம்—எழுவாய் ; ஏமாப்புடைத்து—பயனிலை.*

## 35. தெரிந்து செயல்வகை

*காரியங்களை ஆராய்ந்து செய்யும் திறமை.*

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்ப(து) இழுக்கு.**

(ப-உ) கருமம்—(செய்யத் தொடங்கும்) காரியங்களை, எண்ணி—(முடிக்கும் வழியை முதலிலேயே) தீர ஆராய்ந்து, துணிக—(பின்) நீ தொடங்குவாயாக. துணிந்தபின்—தொடங்கிய பின்பு, எண்ணுவம்—(முடிக்கும் வழியைப்பற்றி) ஆராய்வோம், என்பது—என்று சோர்ந்திருப்பது, இழுக்கு—தவருகும்.

(க-உ) எந்தக் காரியத்தையும் தீர யோசித்தே தொடங்க வேண்டும்.

நீ—தோன்ரு எழுவாய்; துணிக—பயனிலை. என்பது—எழுவாய்; இழுக்கு—பயனிலை.

## 36. வலியறிதல்

தம் வலிமையினையும், பிறர் வலிமையினையும் அறிதல்.

**உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்.**

(ப-உ) உடை—உடைத்தாயிருக்கின்ற, தம்வலி—தமது வலிமையை, அறியார்—அறியாதவராகி, ஊக்கத்தின்—(அப்போது ஏற்பட்ட) மன ஊக்கத்தால், ஊக்கி—காரியத்தைத் தொடங்கி, இடைக்கண்—நடுவிலேயே, முரிந்தார்—(காரியம்) கெட்டுப்போனவர், பலர்—பலர் ஆவார்.

(க-உ) தம் வலிமைக்கு ஏற்ற காரியத்தையே தொடங்கிச் செய்ய வேண்டும்.

முரிந்தார்—எழுவாய்; பலர்—பயனிலை.

## 37. காலம் அறிதல்

காரியம் செய்தற்கு ஏற்ற நேரம் அறிதல்.

**ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்.**

(ப-உ) காலம்—(காரியம் தொடங்குதற் கேற்ற) காலத்தை, கருதி—ஆராய்ந்து, இடத்தால்—(பொருத்தமான) இடத்திலும் இருந்து, செயின்—(அரசன்) செய்வானேயாகுல், ஞாலம்—உலகத்தை, கருதினும்—பெற எண்ணினுலும், கை கூடும்—அது கைகூடி வரும்.

(க-உ) எக்காரியத்தையும் காலமறிந்து செய்தால் கைகூடும்.

அது—தோன்ருஎழுவாய்; கைகூடும்—பயனிலை.

## 38. இடன் அறிதல்

*காரியம் செய்தற்கு ஏற்ற இடத்தை அறிதல்.*

**அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின்.**

(ப-உ) *எஞ்சாமை—(காரியம் செய்வதற்குரிய வழிகளுள் ஒன்றும்) தவறாமல், எண்ணி—ஆலோசித்து, இடத்தால்- (ஏற்ற) இடத்தில் இருந்து, செயின்—செய்தால், அஞ்சாமை அல்லால்- (பின்பு அது முடிவதற்கு) அஞ்சாத திண்மையைத் தவிர, துணை —வேறு துணை, வேண்டா—வேண்டியதில்லை.*

(க-உ) *செய்யும் இடத்திற்கு ஏற்ற காரியத்தையே தொடங்க வேண்டும்.*

*துணை—எழுவாய் ; வேண்டா—பயனிலை.*

## 39. தெரிந்து தெளிதல்

*ஒருவரின் குணத்தை ஆராய்ந்து நம்புதல்.*

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்.**

(ப-உ) *குணம் நாடி—(ஒருவரின்) குணங்களையும் ஆராய்ந்து, குற்றமும் நாடி—குற்றங்களையும் ஆராய்ந்து, அவற்றுள்—அவ் விரண்டனுள், மிகை நாடி—மிகுதியாக இருக்கும் தன்மையினைத் தெரிந்துகொண்டு, மிக்க—அம்மிகுதியானவற்றின் மூலமாக, கொளல்—(அவர் நல்லவரா கெட்டவரா என்பதை) நீ அறிந்து கொள்வாயாக.*

(க-உ) *ஒருவருடைய குணத்தையும், குற்றத்தையும் ஆராய்ந்து, எது மிகுதியாகத் தெரிகிறதோ, அதனை உடையவ ராக அவரை முடிவு கட்டுக.*

*நீ—தோன்றாஎழுவாய் ; கொளல்—பயனிலை.*

## 40. தெரிந்து வினையாடல்

*ஒருவரைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொண்ட பின்பு, அவரைத் தொழிலில் ஈடுபடுத்துதல்.*

**அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**
**நன்குடையான் கட்டே தெளிவு.**

(ப-உ) தெளிவு—(காரியத்தை ஒப்புக்கொடுக்க) நம்பிக்கை கொள்ள வேண்டுவது, அன்பு—தலைவனிடத்து அன்பும், அறிவு —நல்லதை அறியும் அறிவும், தேற்றம்—(நல்லதைச் செய்வதில்) கலங்காமையும், அவா இன்மை—(பிறர் பொருளில்) பேராசை யில்லாமையும் ஆகிய, இந்நான்கும்—இந்த நான்கு குணங்களையும், நன்கு—நன்றாக, உடையான் கட்டே—உடையவனிடத்திலேயாகும்.

(க-உ) அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை என்னும் நான்கும் உடையவனையே காரியம் செய்ய விடவேண்டும்.

தெளிவு—எழுவாய் ; உடையான்கட்டே—பயனிலை.

## 41. சுற்றம் தழாஅல்

சொந்தக்காரர்களைத் தழுவிக் காத்தல்.

**சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்**
**பெற்றத்தால் பெற்ற பயன்.**

(ப-உ) தான்—(ஒருவன்) தான், செல்வம்—செல்வத்தை, பெற்றத்தால்—அடைந்திருப்பதனால், பெற்ற—பெறத்தக்க, பயன்—பயனாவது, சுற்றத்தால்—சொந்தக்காரர்களால், சுற்றப் பட—சுற்றி யிருக்கப்படும்படி, ஒழுகல்—(அவர்களைத் தழுவி) நடந்து கொள்ளுதலாம்.

(க-உ) செல்வம் பெற்றவர், சொந்தக்காரர்களைத் தழுவி ஆதரிக்க வேண்டும்.

பயன்—எழுவாய் ; ஒழுகல்—பயனிலை.

## 42. பொச்சாவாமை

காரியத்தில் சோர்வு கொள்ளாமை.

**அச்சம் உடையார்க்(கு) அரணில்லை யாங்(கு)இல்லை**
**பொச்சாப்(பு) உடையார்க்கு நன்கு.**

(ப-உ) அச்சம் உடையார்க்கு—பயப்படும் கோழைகளுக்கு, அரண்—மலை, கோட்டை முதலிய பாதுகாவல்கள், இல்லையாங்கு —பயன்படுதல் இல்லையாதலைப் போல, பொச்சாப்பு உடையார்க்கு —சோர்வு உடையவர்களுக்கு, நன்கு—(செல்வம் முதலிய) நன்மைகள், இல்லை—பயன்படுதல் இல்லை.

(க-உ) எவ்வளவு செல்வம் இருப்பினும், சோர்ந்தவனுக்குச் சுகம் இல்லை.

நன்கு—எழுவாய் ; இல்லை—பயனிலை. பொச்சாப்பு உடையார்க்கு அச்சம் உடையாரை உவமை கூறியதால் இஃது உவமை அணி.

## 43. செங்கோன்மை

நல்ல செங்கோல் ஆட்சியின் தன்மை.

**குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு.**

(ப-உ) குடி—தன்குடிமக்களை, தழீஇ—தழுவிக் காத்து, கோல் ஓச்சும்—செங்கோல் செலுத்துகின்ற, மாநில மன்னன்—பெரிய உலகத்தின் அரசனுடைய, அடி—திருவடிகளை, உலகு—உலகத்தார், தழீஇ நிற்கும்—(பின்பற்றி) தழுவி வாழ்வார்கள்.

(க-உ) செங்கோல் மன்னனையே உலகம் பின்பற்றி வாழும்.

உலகு—எழுவாய் ; நிற்கும்—பயனிலை. தழீஇ—உயிர் அளபெடை.

## 44. கொடுங்கோன்மை

கொடிய ஆட்சியின் தன்மை.

**அல்லற்பட்(டு) ஆற்று(து) அழுதகண் ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை.**

(ப-உ) செல்வத்தை—(கொடுங்கோல் மன்னனுடைய) செல்வத்தை, தேய்க்கும் படை—அழிக்கக்கூடிய ஆயுதமாவது, அல்லல்பட்டு—(அவனால் குடிகள்) துன்பப்பட்டு, ஆற்றுது—(அத்துன்பத்தைப்) பொறுக்காமல், அழுத—அழுது சிந்திய, கண்ணீர் அன்றே—கண்ணீர் அல்லவா ? (ஆம்)

(க-உ) குடிகளின் கண்ணீர், கொடுங்கோல் மன்னனை அழிக்கும்.

படை—எழுவாய் ; கண்ணீர் (அன்றே)—பயனிலை.

## 45. வெருவந்த செய்யாமை

அஞ்சக்கூடிய செயல்களைச் செய்யாமை.

**கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்**
**நீடின்றி ஆங்கே கெடும்.**

(ப-உ) கடுஞ்சொல்லன்—கடுமையான சொல்லைப் பேசுபவனாகவும், கண் இலன்—கண்ணோட்டம் இல்லாதவனாகவும், ஆயின்—(அரசன்) இருப்பானேயானால், நெடுஞ்செல்வம்—(அவனுடைய) பெருஞ்செல்வம், நீடு இன்றி—நீடித்து நிற்றல் இல்லாமல், ஆங்கே—அப்பொழுதே, கெடும்—அழிந்துவிடும்.

(க-உ) குடிகள் அஞ்சும்படி, இரக்கமின்றிப் பேசுபவனுடைய செல்வம் அழியும்.

செல்வம்—எழுவாய் ; கெடும்—பயனிலை.

## 46. ஊக்கம் உடைமை

ஊக்கம் உடையவராய் இருத்தல்.

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதைஅம்பிற்**
**பட்டுப்பா(டு) ஊன்றும் களிறு.**

(ப-உ) களிறு—யானையானது, புதை அம்பின்—புதையக் கூடிய அம்பினால், பட்டு—தாக்கப்பட்டாலும், பாடு—தன் பெருமையை, ஊன்றும்—(தளராது) நிலைநிறுத்தும். (அதுபோல) உரவோர்—ஊக்கம் உடையவர்கள், சிதைவிடத்து—(எடுத்த காரியத்திற்கு) அழிவு வந்தபோதும், ஒல்கார்—தளரமாட்டார்கள்.

(க-உ) காரியம் சிதையினும், ஊக்கம் உடையவர்கள் தளரமாட்டார்கள்.

களிறு—எழுவாய் ; ஊன்றும்—பயனிலை. உரவோர்—எழுவாய் ; ஒல்கார்—பயனிலை. உரவோருக்குக் களிற்றை உவமை காட்டியதால் இஃது உவமை அணி

## 47. மடியின்மை

சோம்பல் இல்லா திருத்தல்.

**மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்**
**தாஅய தெல்லாம் ஒருங்கு.**

(ப-உ) அடி—திருவடியால், அளந்தான்—உலகத்தை அளந்த திருமால், தாயது எல்லாம்—தாவிக் கடந்த உலகப் பரப்பு முழுவதையும், ஒருங்கு—ஒரு சேர, மடிஇலா—சோம்பல் இல்லாத, மன்னவன்—அரசன், எய்தும்—அடைவான்.

(க-உ) சோம்பல் இல்லாத அரசன் முயன்றால், உலக முழுவதையும் அடையமுடியும்.

மன்னவன்—எழுவாய்; எய்தும்—பயனிலை. தாஅயது—உயிர் அளபெடை.

## 48. ஆள்வினை உடைமை

இடைவிடாத உடல் முயற்சி உடைமை.

**தெய்வத்தான் ஆகா(து) எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

(ப-உ) தெய்வத்தான்—ஊழ்வினையால், ஆகாது எனினும்-(எடுத்த காரியம்) முடியாமற்போனாலும்,முயற்சி-முயற்சியானது, தன்—தனக்கு இடமாகிய, மெய்—உடம்பினது, வருத்தக் கூலி—வருத்தத்திற்கு ஏற்ற கூலியை, தரும்—கொடுக்கும். (வீணாகாது)

(க-உ) உடம்பின் முயற்சிக்கு ஏற்ற கூலி கிடைத்தே தீரும்.

முயற்சி—எழுவாய்; தரும்—பயனிலை.

## 49. இடுக்கண் அழியாமை

துன்பம் வந்தால் மனம் கலங்காமை.

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வ(து) அஃதொப்ப(து) இல்.**

(ப-உ) இடுக்கண்—துன்பம், வருங்கால்—வந்தபோது, நகுக—(துன்புறாது) நீ சிரிப்பாயாக. அதனை—அத்துன்பத்தை, அடுத்து—மேலும் மேலும் தொடர்ந்து, ஊர்வது—அடக்கித் தேய்ப்பது, அஃது—அந்த மகிழ்ச்சியை, ஒப்பது—ஒத்ததாய் உள்ள வேறொன்று, இல்—இல்லை.

(க-உ) துன்பம் வந்தால் மகிழ வேண்டும்; துன்பம் தானே போகும்.

ஒப்பது—எழுவாய்; இல்—பயனிலை.

## 50. அமைச்சு

நல்ல மந்திரியின் தன்மை.

**தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்ல(து) அமைச்சு.**

(ப-உ) தெரிதலும்—(செய்யத்தக்க காரியம் இன்னது என்று) தெரிதலும், தேர்ந்து செயலும்—(அதனைச் செய்யும் வழியை) ஆராய்ந்து செய்தலும், ஒருதலையாச் சொல்லலும்—(அரசனுக்குச் சஞ்சலம் உண்டானபோது இதுதான் சரியென்று) ஒரே உறுதியாக வற்புறுத்தலும், வல்லது—வல்லவனே, அமைச்சு—(சிறந்த) மந்திரியாவான்.

(க-உ) தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச் சொல்லலும் உடையவனே உண்மை மந்திரியாவான்.

வல்லது—எழுவாய் ; அமைச்சு—பயனிலை.

## 51. சொல்வன்மை

பேச்சு வன்மை உடையவராய் இருத்தல்.

**சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை யறிந்து.**

(ப-உ) சொல்லை—தான் சொல்லக் கருதிய சொல்லை, பிறிது ஓர் சொல்—வேறொருவருடைய சொல்லாய், வெல்லும் சொல்-வெல்லக்கூடிய சொல், இன்மை அறிந்து—இல்லாததைஅறிந்து, அச்சொல்லை—(சொல்லக் கருதிய) அந்தச் சொல்லை, சொல்லுக-நீ சொல்லுவாயாக.

(க-உ) தன் பேச்சைப் பிறர் பேச்சு வெல்லாதபடிப் பேச வேண்டும்.

நீ—தோன்றா எழுவாய் ; சொல்லுக—பயனிலை.

## 52. வினைத்தூய்மை

பரிசுத்தமான காரியங்களைச் செய்தல்.

**சலத்தால் பொருள்செய்(து) ஏமார்த்தல் பசுமட்**
**கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.**

(ப-உ) சலத்தால்—தீவினையால், பொருள் செய்து—பொருளைச் சம்பாதித்து, ஏமார்த்தல்—பாதுகாவல் செய்வது, பசுமண் கலத்துள்—பச்சை மண்ணால் செய்யப்பட்ட பாண்டத்தில், நீர் பெய்து—தண்ணீரை ஊற்றி, இரீஇயற்று—பாதுகாவல் செய்வது போலாம்.

(க-உ) கெட்ட வழியால் பொருள் சம்பாதித்தவர்கள், அப்பொருளுடன் தாமும் அழிவர். 'பச்சை மண் பாண்டத்தில்

தண்ணீர் ஊற்றினால் இரண்டும் கெடுவதைப் போல' என்று உவமை காட்டியதால் இஃது உவமை யணி.

ஏமார்த்தல்—எழுவாய் ; இரீஇயற்று—பயனிலை.

இரீஇயற்று—உயிர் அளபெடை.

## 53. வினைத்திட்பம்

காரியம் செய்வதில் திடமான உறுதி கொள்ளுதல்.

**துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை.**

(ப-உ) (நல்ல காரியத்தைத் தொடங்கும்போது) துன்பம்-துன்பங்கள், உற—மிகுதியாக, வரினும்—வருவதாக இருந்தாலும் (சோராமல்) துணிவு ஆற்றி—துணிச்சலைச் செலுத்தி, இன்பம் பயக்கும்—இன்பத்தைக் கொடுக்கின்ற, வினை—நற் செயலையே, செய்க—நீ செய்வாயாக.

(க-உ) துன்பத்திற்குக் கலங்காமல், இன்பந் தரும் காரியத்தையே செய்ய வேண்டும்.

நீ—தோன்றா எழுவாய் ; செய்க—பயனிலை.

## 54. வினை செயல் வகை

காரியம் செய்யும் விதம்.

**வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்**
**தீயெச்சம் போலத் தெறும்.**

(ப-உ) வினை—(செய்யத் தொடங்கிய) செயலும், பகை—(அழிக்கத் தொடங்கிய) பகையும், என்ற—என்று சொல்லப்பட்ட, இரண்டின்—இரண்டினுடைய, எச்சம் —(முழுதும் செய்யாது விட்ட) குறைபாடுகள், நினையுங்கால்—ஆராய்ந்து பார்க்கின், தீ எச்சம் போல—(முழுதும் அவிக்காமல் விட்ட) நெருப்பின் மிச்சத்தைப் போல், தெறும்—(ஒரு காலத்தில் வளர்ந்து) அழித்து விடும்.

(க-உ) காரியம் செய்வதிலும், பகைவரை அழிப்பதிலும் குறைபாடு நிறுத்தாமல், முற்றும் முடித்துவிட வேண்டும்.

(இரண்டின்) எச்சம்—எழுவாய் ; தெறும்—பயனிலை. இச் செய்யுளில் தீ எச்சத்தை உவமை கூறியதால் உவமையணி.

என்ற இரண்டின்—அ தொகுத்தல் விகாரம்.

## 55. குறிப்பு அறிதல்

*பிறர் கருத்தைக் குறிப்பாக அறிந்து கொள்ளுதல்.*

**ஐயப் படாஅ(து) அகத்த துணர்வானைத்
தெய்வத்தோ(டு) ஒப்பக் கொளல்.**

(ப-உ) அகத்தது—(பிறருடைய) மனத்தில் உள்ள குறிப்பை, ஐயப்படாது—சந்தேகம் இன்றி (நிச்சயித்து) உணர்வானை—(குறிப்பால்) உணர வல்லவனை, தெய்வத்தோடு—கடவுளோடு, ஒப்ப—சமமாக, கொளல்—நீ கொள்வாயாக.

(க-உ) பிறர் மனக்குறிப்பை உணரக் கூடியவர்கள், அங்ஙனம் செய்யும் கடவுளுக்கு ஒப்பாவார்கள்.

நீ—தோன்றா எழுவாய்; கொளல்—பயனிலை.

## 56. அவையறிதல்

*சபையில் உள்ளவர்களின் நிலைமையை அறிந்து பேசுதல்.*

**அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.**

(ப-உ) சொல்லின் தொகை—சொற்களைத் தொகுத்துப் பேசுவதை, அறிந்த—தெரிந்த, தூய்மையவர்—தெளிவுடையவர்கள், அவை அறிந்து—(தாம் பேச இருக்கின்ற) சபையில் உள்ளவர்களின் தகுதியைத் தெரிந்துகொண்டு, ஆராய்ந்து—(பேசவேண்டியவைகளை) ஆராய்ச்சி செய்து, சொல்லுக—(பின்பு) பேசுவார்களாக.

(க-உ) பேசுபவர், சபையின் நிலைக்கு ஏற்பப் பேசவேண்டும்.

தூய்மையவர்—எழுவாய்; சொல்லுக—பயனிலை.

## 57. நாடு

*நல்ல நாட்டின் தன்மை.*

**பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்(கு)
இறைஒருங்கு நேர்வது நாடு.**

(ப-உ) பொறை—(பிறநாட்டு மக்களாகிய) சுமை, ஒருங்கு-ஒருசேர, மேல்வருங்கால்—தன்னிடத்தில் வந்தால், தாங்கி—

(அவர்களை) ஏற்றுக் காத்து, இறைவற்கு—தன் அரசனுக்கு, இறை—வரிப்பணம், ஒருங்கு—முழுவதையும், நேர்வது—செலுத்த வல்லதே, நாடு—(உயர்ந்த) நாடாகும்.

(க-உ) தன்னிடம் வந்த பிறரையும் காத்து, தன் அரசனுக்கும் வளந்தருவதே நல்ல நாடு.

நேர்வது—எழுவாய்; நாடு—பெயர்ப் பயனிலை.

## 58. படை மாட்சி

நல்ல படையின் இலக்கணம்.

**கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்**
**ஆற்ற லதுவே படை.**

(ப-உ) கூற்று—எமன், உடன்று—கோபித்து, மேல்வரினும்—தன்மேல் சண்டைக்கு வந்தாலும், கூடி—(அஞ்சாது) ஒன்று கூடி, எதிர்நிற்கும்—எதிர்த்து நிற்கக்கூடிய, ஆற்றலதுவே—வலிமையை உடையதே, படை—(சிறந்த) படையாகும்.

(க-உ) எமனையும் எதிர்க்கக் கூடியதே வலிய படையாகும்.

ஆற்றலதுவே—எழுவாய்; படை—பெயர்ப் பயனிலை.

## 59. படைச் செருக்கு

படைகளின் வீர மேம்பாடு.

**விழித்தகண் வேல்கொண்(டு) எறிய அழித்திமைப்பின்**
**ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.**

(ப-உ) வேல் கொண்டு—(பகைவர்கள்) வேலாயுதத்தைக் கைக்கொண்டு, எறிய—(தம்மேல்) வீச, (அப்போது வீரர்கள்) விழித்தகண்—திறந்து கொண்டிருக்கும் தம் கண்களை, அழித்து—(ஒருநிலையான பார்வையிலிருந்து) மாற்றி, இமைப்பின்—மூடி மூடிச் சிமிட்டுவார்களே யானால், (அது) வன்கணவர்க்கு—வீரருக்கு, ஓட்டு அன்றோ—புறமுதுகிட்டு ஓடுதலாகப் பொருள் அல்லவா? (ஆம்)

(க-உ) எதிரி வேல் விடும்போது, வீரர்கள் தம் கண்களைக் கூடச் சிமிட்டலாகாது.

இமைத்தல்—தோன்றா எழுவாய்; ஓட்டன்றோ—பயனிலை.

## 60. நட்பு

நல்ல சிநேகிதரின் தன்மை.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்(து)**
**அகநக நட்பது நட்பு.**

(ப-உ) முகம் நக—(நேரில் கண்டபோது) முகம் மட்டும் மலரும்படி, நட்பது—(ஒப்புக்குச்) சிநேகிப்பது, நட்பு அன்று-உண்மையான சிநேகம் ஆகாது. நெஞ்சத்து—அன்போடு, அகம் நக—மனம் மலரும்படி, நட்பது—சிநேகிப்பதே, நட்பு—நல்ல சிநேகம் ஆகும்.

(க-உ) ஒப்புக்குச் சிநேகிக்காமல் உள்ளன்போடு சிநேகிக்க வேண்டும்.

(அகநக) நட்பது—எழுவாய் ; நட்பு—பயனிலை.

## 61. நட்பு ஆராய்தல்

சிநேகத்திற்கு உரியவர் இன்னார் என்று ஆராய்தல்.

**உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க**
**அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.**

(ப-உ) உள்ளம்—மன உறுதி, சிறுகுவ—குறைவதற்குரிய செயல்களை, உள்ளற்க—நீ எண்ணாதே. (அதுபோலவே) அல்லல் கண்—துன்பம் வந்த காலத்தில், ஆற்று அறுப்பார்—கைவிட்டு உன் ஆற்றலைக் குறைக்கும் தீயோருடைய, நட்பு—சிநேகத்தை, கொள்ளற்க—நீ கொள்ளாதே.

(க-உ) துன்பக் காலத்தில் கைவிடுபவரின் நட்பைக் கொள்ள லாகாது.

நீ—தோன்றா எழுவாய் ; கொள்ளற்க—பயனிலை.

## 62. பழைமை

பலநாள் பழகிய நட்பின் தன்மை.

**அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்**
**வழிவந்த கேண்மை யவர்.**

(ப-உ) அன்பின் வழி வந்த—(பலநாள் பழகிய) அன்பின் வழியாக நிகழ்கின்ற, கேண்மையவர்—சிநேகத்தை யுடையவர், அழிவந்த—தமக்கு அழிவு தரக்கூடிய செயல்களை, செய்யினும்-

(தம் நண்பர்) செய்தாலும், அன்பு அறுர்—(அந்நண்பரிடத் துள்ள) அன்பு அற்றுப்போக மாட்டார்கள்.

(க-உ) பலநாள் பழகிய நண்பருக்குத் தவறி ஒரு துன்பம் செய்தாலும், அவர்கள் அன்பு நீங்கமாட்டார்கள்.

கேண்மையவர்—எழுவாய் ; அன்பறுர்—பயனிலே.

## 63. தீ நட்பு

கெட்ட சினேகிதரின் தன்மை.

**அமரகத்(து) ஆற்றறுக்கும் கல்லாமா அன்னுர்**
**தமரின் தனிமை தலே.**

(ப-உ) அமர் அகத்து—போர்க்களத்திலே, ஆற்று அறுக்கும்—(தன்மேல் ஏறியிருந்தவனேக் கீழே தள்ளி) வலிமையைக் குறைக்கின்ற, கல்லா—போர்ப்பயிற்சியை அறியாத, மா—குதிரையை, அன்னுர்—ஒத்தவர்கள் (அஃதாவது, ஆபத்தில் கைவிடுபவர்கள்) தமரின்—நண்பராக இருப்பதைக் காட்டிலும்,தனிமை—தனித்திருப்பதே, தலே—(ஒருவருக்குச்) சிறந்ததாகும்.

(க-உ) தீய நண்பரோடு பழகுவதைக் காட்டிலும் தனித்திருப்பதே நல்லது.

தனிமை—எழுவாய் ; தலே—பயனிலே.

## 64. கூடா நட்பு

உள்ளன்பு கலவாத நட்பினரின் தன்மை.

**சொல்வணக்கம் ஒன்னுர்கண் கொள்ளற்க வில்வணக்கம்**
**தீங்கு குறித்தமை யால்.**

(ப-உ) வில்வணக்கம்—வில்லின் வளேவு, தீங்கு குறித்தமையால்—(எதிரிமேல் அம்பெய்ய வேண்டும் என்ற) தீங்கைக் குறிக்கோளாகக் கொண்டு அமைக்கப்பட்டிருப்பதால், ஒன்னுர்கண்—பகைவரிடத்து நிகழ்கின்ற, சொல் வணக்கம்—(வளேந்து பேசும்) சொல் அடக்கத்தை, கொள்ளற்க—(உண்மையென்று நம்பி) நீ ஏற்றுக் கொள்ளாதே.

(க-உ) உள்நட்பு இல்லாதவர்கள் ஏமாற்றப் பேசும் சொல்லடக்கத்தை நம்பலாகாது.

நீ—தோன்ரு எழுவாய் ; கொள்ளற்க—பயனிலே.

## 65. குடிமை

*உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர் தன்மை.*

**ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்**
**இழுக்கார் குடிப்பிறந் தார்.**

(ப-உ)குடிப்பிறந்தார்—உயர்ந்த குடும்பத்தில்பிறந்தவர்கள், ஒழுக்கமும்—நல்லொழுக்கமும், வாய்மையும்—மெய்ம்மையும், நாணும்—மானமும் (ஆகிய) இம்மூன்றும்—இந்த மூன்று பண்புகளி லிருந்தும், இழுக்கார்—தவறமாட்டார்கள்.

(க-உ) நல்ல குடியிற் பிறந்தவருக்கு ஒழுக்கம், மெய், மானம் என்னும் மூன்றும் இருக்கும்.

குடிப்பிறந்தார்—எழுவாய் ; இழுக்கார்—பயனிலை.

## 66. மானம்

*தாழ்வைப் பொறுக்காத மானம் உடைமை.*

**குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ**
**குன்றி அனைய செயின்.**

(ப-உ) குன்றின் அனையாரும்—மலையை ஒத்த பெருமை உடையவர்களும், குன்றுவ—(தம் குடிப் பெருமை) குறைதற் கேற்ற காரியங்களை, குன்றி அனைய—குன்றிமணியை ஒத்த சிறி தளவு, செயின்—செய்தாலும், குன்றுவர்—பெருமை குறைந் தவர் ஆவார்கள்.

(க-உ) மானம் இழக்கக்கூடிய காரியத்தைச் சிறிதளவும் செய்யலாகாது.

அனையாரும்—எழுவாய் ; குன்றுவர்—பயனிலை.

## 67. பெருமை

*பெரியாரது பெரிய சிறப்புத்தன்மை.*

**பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்.**

(ப-உ) பெருமை உடையார்—பெருந்தன்மை உடையவர்கள், அருமை உடைய—பிறரால் செய்வதற்கு முடியாத, செயல்—காரியங்களை, ஆற்றின்—முறையாக, ஆற்றுவார்—செய்து முடிப்பார்கள்.

(க-உ) பிறரால் செய்ய முடியாத காரியங்களையும் பெருமை உடையவர்கள் செய்வார்கள்.

பெருமை உடையவர்—எழுவாய் ; ஆற்றுவார் —பயனிலை.

## 68. சான்றாண்மை

நிறைந்த பல உயர்ந்த குணங்களைக் கையாளுதல்.

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)**
**ஆழி எனப்படு வார்.**

(ப-உ) சான்றாண்மைக்கு—நிறைந்த பெருந்தன்மைக்கு, ஆழி எனப்படுவார்—கடல் என்று சொல்லக்கூடிய பெரியோர்கள், ஊழி—(உலக முடிவாகிய) ஊழிக்காலமே, பெயரினும்—பெயர்ந்து அழிப்பதானாலும், தாம்—தாங்கள், பெயரார்—(தங்கள் பெருந்தன்மையிலிருந்து) மாறமாட்டார்கள்.

(க-உ) சான்றோர்கள், எத்துன்பம் வரினும் கொள்கையிலிருந்து மாறமாட்டார்கள்.

எனப்படுவார்—எழுவாய் ; பெயரார்—பயனிலை.

## 69. குடிசெயல்வகை

பிறந்த குடும்பத்தை மேலாகச் செய்யும் விதம்.

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்.**

(ப-உ) குடி—(நான் பிறந்த) குடியை, செய்வல்—உயர்ச்சி உடையதாகச் செய்வேன், என்னும்—என்று பாடுபடுகின்ற, ஒருவற்கு—ஒருவனுக்கு, தெய்வம்—தெய்வமானது, மடி—(தன் இடுப்பு) உடையை, தற்று—இறுக்கிக் கட்டிக்கொண்டு, தான் முந்துறும்—தான் முன்வந்து உதவி செய்யும்.

(க-உ) குடிப்பெருமையை வளர்ப்பவனுக்கு, கூடத் தெய்வமும் உதவி செய்யும்.

தெய்வம்—எழுவாய் ; முந்துறும்—பயனிலை.

## 70. உழவு

பயிர்த் தொழிலின் சிறப்பு.

**இலமென்(று) அசைஇ யிருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்.**

(ப-உ) இலம்—(யாங்கள்) ஒன்றும் இல்லாத ஏழைகள், என்று—என்று சொல்லி, அசைஇ—சோம்பல் கொண்டு, இருப்பாரை—இருக்கும் சோம்பேறிகளை, நிலம் என்னும்—பூமி என்கின்ற, நல்லாள்—பெண், காணின்—கண்டால், நகும்—(அவர்களின் சோம்பலைக் குறித்துச்) சிரிப்பாள்.

(க-உ) உழவுத் தொழில் இருக்கவும் அதைச் செய்யாத சோம்பேறிகளைக் கண்டால் நிலமாது சிரிப்பாள்.

நல்லாள்—எழுவாய்; நகும்—பயனிலை. அசைஇ—சொல்லிசை அளபெடை.

---

எல்லா உரிமையும் பைந்தமிழ்ப் பதிப்பகத்திற்கே.

**1—7—49**

ஸ்ரீ. அரவிந்தாஸ்ரம அச்சகம், புதுச்சேரி. W. D. 544/49/1000

## வித்துவான். சுந்தர-சண்முகனாரின்

# வெளியீடுகள்

---

1. வீடும் விளக்கும். விலை ரூபா 1.
   *திருமணப் பரிசுக்குரிய வாழ்க்கை ஓவியம்.*
2. தனித்தமிழ்க் கிளர்ச்சி. விலை அணா 5.
3. காந்தியின் நாகரிகம். கைவசம் இல்லை.
4. திருக்குறள் தெளிவுரை—1. விலை அணா 3.
   *முதல் பாரத்திற் குரியது.*
5. திருக்குறள் தெளிவுரை—2. விலை அணா 4.
   *இரண்டாம் பாரத்திற் குரியது.*
6. திருக்குறள் தெளிவுரை—3. விலை அணா 5.
   *மூன்றாம் பாரத்திற் குரியது.*
7. ஆத்திசூடி அமிழ்தம். விலை அணா 5.
   *சிறுவருக்கேற்ற கதைகள்.*
8. குழந்தைப் பாட்டு. விலை அணா 3.
9. சிறுவர் செய்யுட் சோலை. விலை அணா 4.
   *பாரதியார், பாரதிதாசன் முதலியோரின் கவிகள்.*
10. தமிழ்த் திருநாள். விலை அணா 1.
11. திருக்குறள் தெளிவு. விலை அணா 1.
    *மாதம் இரு தொடர்ச்சி உரை (பத்துப்பத்துக் குறள்கள்)*

விற்பனையாளர்க்குக் கழிவு உண்டு.

*கிடைக்குமிடம் :*

**பைந்தமிழ்ப் பதிப்பகம்,**
61—பி. வைசியர் தெரு,
புதுச்சேரி.